முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி திமுக சார்பில் ஊமச்சி குளத்தில் நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி மற்றும் குதிரை வண்டி பந்தயத்தை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், ஆ. வெங்கடேசன் எம்.எல்.ஏ., சோமசுந்தர பாண்டியன், சிறைச்செல்வன், ஆசைக்கண்ணன், நேரு பாண்டியன், வீரராகவன், வக்கீல் கலாநிதி, பெ. சசிகுமார், மருது பாண்டியன், கௌரி சங்கர், கே.பி. பூமிநாதன், வடிவேல், முருகன், மதிவாணன், ஒத்தக்கடை சரவணன், அழகு பாண்டி, கார்த்திக் ராஜா, ஆதிசங்கர் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.மா.ராமலிங்கத்திடம் உடல்நலம் குறித்து விசாரித்தபோது எடுத்தபடம். அருகில் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் அ.அசோகன், ந.சுப்பிரமணி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நீலாங்கரையில் நாளை நடைபெறுகிறது!

சென்னை தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, ஆக. 26-

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என மவாட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பரிமணியன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு

சென்னைத் தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் நாளை (27.08.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில், நீலாங்கரையில் உள்ள புகாரி ஹோட்டல் ராணி மகாலில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழக செயலாளர்கள், ஒன்றியக்கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதி நிதிகள் மற்றும் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், ஆக. 26-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் 28.08.2024 புதன்கிழமை காலை 10.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகம் மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் கழக முதன்மை செயலாளர், நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி கிளை கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. கழக முப்பெரும் விழா
2. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து.
3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒன்றியம் - நகரம் - பேரூர் வாரியாக

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, ஆக. 26-

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் ஒன்றியம், நகர, பேரூர் வாரியாக பொது உறுப்பினர் கூட்டங்கள் நடைபெறுகிறது என மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:-

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் நடைபெற உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வாரியான பொது உறுப்பினர் கூட்டம் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறுகிறது. எனவே அந்தந்த பகுதிகளில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

26.08.204 -திங்கள் - பவானி வடக்கு ஒன்றியம்-கவுண்டர் மஹால், குருப்பநாயக்கன் பாளையம், காலை 10 மணி-பவானி தெற்கு ஒன்றியம்-பாவா திருமண மண்டபம், கவுந்தப்பாடி,பகல் 12 மணி-கோபி தெற்கு ஒன்றியம்-DS மஹால், சிறுவலூர், மாலை 5 மணி-பவானி நகரம்-அர்த்தனாரீஸ்வரர் மஹால், வர்ணபுரம்.

02.09.2024 - திங்கள்-காலை 11 மணி-சத்தி வடக்கு ஒன்றியம்-கவரா மஹால், அத்தாணி ரோடு,

கொமராபாளையம், மாலை 5 மணி-புளியம்பட்டி நகரம்- K G மஹால், புளியம்பட்டி.

03.09.2024 - செவ்வாய்-காலை 11 மணி-அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம் -சிதேவி மஹால், யூனியன்அலுவலகம் எதிரில், அம்மாபேட்டை, மாலை 5 மணி -அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம்- ஹரிகிருஷ்ணா மஹால், சித்தார்.

04.09.2024 - புதன்-மாலை 3 மணி-அந்தியூர் ஒன்றியம்-A.L.M.P. திருமண மண்டபம், பர்கூர்

ரோடு, அந்தியூர், 08.09.2024- ஞாயிறு-மாலை 5 மணி-நம்பியூர் ஒன்றியம்-ஜீவா அலுவலகம் ரோடு, நம்பியூர்,10.09.2024-செவ்வாய்-காலை 10 மணி-சத்தி தெற்கு ஒன்றியம்-S.S.மஹால், கோணமூலை,11.09.2024-புதன்-காலை 10 மணி-கோபி நகரம்-நவலடி மஹால், ல.கள்ளிப்பட்டி பிரிவு, கோபி,மாலை 5 மணி-சத்தியமங்கலம் நகரம்-குமரன் மஹால், சத்தி,12.09.2024-வியாழன்-காலை 10 மணி-பவானிசாகர் வடக்கு ஒன்றியம்-.T.N.S திருமண மண்டபம்,தொட்டம்பாளையம், 13.09.2024-வெள்ளி-காலை 10 மணி-கோபி வடக்கு ஒன்றியம்-ஸ்ரீமகா திருமண மண்டபம், ஒத்தக்குதிரை. 14.09.2024-சனி காலை 10 மணி-பவானி சாகர் தெற்கு ஒன்றியம்- கண்ணப்பர் மஹால், மாதம்பாளையம்.

இரயில்வே பணிகளுக்கான

பொதுத்தேர்வு மதிப்பெண் நிர்ணயத்தில் முறைகேடு!

ஒன்றிய அமைச்சருக்கு - டாக்டர் அ.கலாநிதி வீராசாமி கடிதம்!

சென்னை, ஆக.26-

இரயில்வே பணிகளுக்கான தேர்வில் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்படுபவர் களுக்கான கட் ஆப் மார்க் எஸ்.சி/எஸ்.டி பிரிவினருக்கான கட் ஆப் மார்க் நிர்ணயித்து இரயில்வே துறையில் ஆட்கள் நியமிக்கப்படுவதில் பெரும் முறைகேடு நடைபெற்று வருகின்றது என்று வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த முறை கேடு குறித்து புகார் கூறி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

கடந்த 10.03.2022 அன்றே இரயில்வே துறையில் இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிராக அதிகாரிகள் செயல்படுகின்றனர். இரயில்வே துறையில் காலி இடங்களுக்கு ஆட்கள் இரயில்வே தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்படும் போது, பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் எஸ்.சி/எஸ்.டி மற்ற ஓ.பி.சி எனப்படும் பிற்படுத்தப்பட்டவர்கள் பிரிவினைச் சேர்ந்த போட்டியாளர்களுக்கு நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச மதிப்பெண்களை விட குறைவாக நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. இது எஸ்.சி/எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு எதிரானது.

ஒரு தேர்தல் பொதுப்பிரிவுக்கு என ஒதுக்கப்படும் பணியிடங்கள் முதலில் அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு ஒதுக்கப்படும். இதில் தேர்வு எழுதிய எஸ்.சி/எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்கள் உட்பட அனைத்து பிரிவினரும் மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். பின்னர் எஞ்சியுள்ள எஸ்.சி/எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினர் அவர்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு தேர்ந்தெடுக்க ப்பட்டு பணி நியமனம் செய்யப்படுகிறார்கள்.

இந்த நடைமுறை பின்பற்றப்படும் போது கண்டிப்பாக பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் குறைந்தபட்ச மதிப்பெண் எஸ்.சி/எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினை சேர்ந்த நபர்களுக்கு நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச மதிப்பெண்களை விட அதிகமாகவே இருக்கும். இரயில்வே தேர்வு வாரிய முடிவுகளை மேற்கோள்காட்டி தங்களுக்கு கடிதம் எழுதியுள்ளேன். ஆனால் தற்போது இரயில்வே நிர்வாகம் இட ஒதுக்கீட்டு கொள்கையை முறியடிக்கும் வகையில் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு குறைவான குறைந்தபட்ச மதிப்பெண்ணை எப்படி நிர்ணயித்துள்ளது? இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிராக சில அதிகாரிகள் சேர்ந்து கொண்டு சதி செய்கின்றனர் என்பதே தெளிவாகத் தெரிகின்றது.

இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு 28.03.2022 அன்று நாடாளுமன்றத்தில் நேரமில்லா நேரத்தில் இந்த பிரச்சனையைப் பற்றி பேசியுள்ளேன். இதனை அடுத்து 01.04.2022 அன்று உங்களை நேரில் சந்தித்து, இந்த முறைகேடு குறித்துப் பேசிய தங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகின்றேன். மிக அதிக எண்ணிக்கையிலான எஸ்.சி/எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட நபர்கள் பொதுப்பிரிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்களை விட கூடுதலாகப் பெற்றும் பணி நியமனம் பெறும் வாய்ப்பை இழந்து விட்டனர்.

அதிகாரிகளின் தவறான செயல்கள்!

இரயில்வே துறையை சேர்ந்த அதிகாரிகளின் இந்த தவறான செயல்களால் சுமார் 3000 பேரிலிருந்து 4000 பேர் வரை வேலை பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர். எனவே மீண்டும் 25.04.2022 அன்று இந்த பிரச்சனை குறித்து தங்களுக்கு கடிதம் எழுதியுள்ளேன். இப்படி நடப்பது ஏதோ ஒரு தனிப்பட்ட நிகழ்வன்று இது இரயில்வே தேர்வு வாரியத்தில் தொடர்ந்து நடந்து வரும் முறை கேடாகும்.

இதனை அடுத்து இரயில்வே அதிகாரிகளை நேரில் சந்தித்து விளக்கம் கேட்டேன். முறையான விடை தராமல் ஏதேதோ பேசி மழுப்பப் பார்த்தனர். நான் அவர்களது பதிலை ஏற்றுக் கொள்ளாமல் எழுத்து மூலம் எனக்கு பதிலளியுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

ஆனால் இதுவரை எனக்கு எழுத்து மூலம் பதில் தரவில்லை. நான் இது குறித்து எழுதிய கடிதங்களுக்கும் பதில் தரவில்லை. நான் எழுதிய கடிதங்களைப் பெற்றுக் கொண்டதாகக் கூட எனக்கு கடிதம் எழுதவில்லை.

ஆனால் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு பின் நடைபெற்ற தேர்வுகளை முறைப்படி நடத்தப்பட்டதாக அறிகின்றேன். அதைப்பற்றி முறைப்படியான விளம்பாங்கள் கூட வெளியிடப்பட்டன.

அரசியல் சட்ட அவமதிப்பு!

இருப்பினும் கடந்த மே, 2024 ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்பு இரயில்வே அதிகாரிகள் மீண்டும் தங்களது விளையாட்டை தொடங்கி விட்டனர். மீண்டும் எஸ்.சி/எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மட்டும் எதிராக செயல்படவில்லை; அரசியல் சட்டத்தையே அவமதிக்கின்றனர். இதனால் தான் கடந்த 02.08.2024 அன்று நான் மீண்டும் இந்த பிரச்சனை குறித்து பாராளுமன்றத்தில் பேசியுள்ளேன்.

வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டை முறைப்படி பின்பற்றுவது ஒரு முக்கியமான பணியாகும். இதில் முறைகேடு செய்வது ஒரு குற்றச் செயலாகும். எனவே இது குறித்து விரிவான விசாரணை நடத்த வேண்டும். தேசிய எஸ்.சி. கமிஷன், தேசிய எஸ்.டி. கமிஷன் மற்றும் தேசிய பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் முதலானவை இணைந்து ஒரு கூட்டு விசாரணை நடத்தி இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இடஒதுக்கீட்டுப் பிரச்சினை மிகவும் முக்கியமானதாகும். இதனை முறியடிக்கும் விதத்தில் அதிகாரிகள் செயல்படுவது, நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு எதிரானதாகும்.

நமது பிரதமர் கூட பாராளுமன்றத்தில் இடஒதுக்கீட்டு கொள்கை முறைப்படி செயல்படுத்தப்படும் என்று பலமுறை பாராளுமன்றத்திலேயே உறுதி அளித்துள்ளார். இருப்பினும் சில அதிகாரிகள் இப்படி முறைகேடாக செயல்படுவது கண்டிக்கத் தக்கதாகும். எனவே தவறு செய்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து, இது போன்ற நிகழ்வுகள் நடப்பதை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

சமீபத்தில் ஒன்றிய துணை அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் ஒன்றிய அரசின் உயர் பதவிகளுக்கு மாற்று சாளர அமைப்பில் தனியார் துறையில் பணியாற்றும் நபர்களை நியமனம் செய்யும் முறையை தடை செய்தது போல தாங்களும் இரயில்வே துறையில் பணி நியமனம் செய்யும் முறையில் நடைபெறும் முறை கேடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - சாலவாக்கம் ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கழகத்தினருக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., ஒன்றியச் செயலாளர் டி.குமார், என்.எஸ்.ரவி வி.ஞானசேகர், ஜெ.சுஜாதா ஜெயராமன், பி.வெ.பாலமுருகன், ஆர்.வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டியன், ஐ.பாபுஷரீப், எம்.பி., கெ.ஞானசேகரன், இரா.நாகன், ஞா.ஹேமலதா, கு.வசந்தி கோ.சிவராமன், எஸ்.ஆர்.வெங்கடேசன், ப.சசிகுமார், என்.எஸ்.பாரிவள்ளல், கு.துரைவேல், என்.ரவி, ப.கார்த்திகேயன், பெ.மணி, த.சத்தியமூர்த்தி, எஸ்.ரத்தினமாலா, எஸ்.முரளிதரன், எஸ்.ஆர்.அப்பாதுரை, எஸ்.பி.நடராஜன், ஏ.அரசு, ஆர்.செந்தில்குமார், கே.கார்த்திகேயன், பி.சுப்பிரமணி, க.பழனி, க.பழனிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.